ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ கல்யாணசுந்தரவல்லி ஸமேத ஸ்ரீ சௌந்தரராஜ பரப்ர்மணே நம:

# திருமாலிருஞ்சோலை
# ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தானத்தில்
# ஆக்ரமிப்பு.

---

**தேனோடு வண்டாலும் திருமாலிருஞ்சோலை**
**தானிடமாக்கொண்டான் தடமலர்க்கண்ணிக்காய்**
**ஆன்விடை யேழன்றடர்த்தாற்கு ஆளானாரல்லாதார்**
**<u>மானிடவரல்லரென்று</u> என்மனத்தே வைத்தேனே.**

இப் பாசுரம் திருமங்கை மன்னன் திருமாலிருஞ்சோலை எம்பெருமான் விஷயமாக அருளிச்செய்தது. இதில் எங்கே தம்மையும் மானிடரல்லரென்று, ஆழ்வார் மதிப்பரோ என்றஞ்சியே, "கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் கலைப் பெருமான் ஒலிமிக்க பாடலையுண்ட ராமாநுஜசீயம் மாலிருஞ்சோலைமலை" என்னும் பொருப்பிடத்தை தம் உள்ளத்து இருப்பிடமாகக் கொண்டார், காரேய்கருணை இராமாநுஜன், மனத்துள் கொண்டதுமன்றி, சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் அநுட்டித்து காட்டியுள்ளார். தம்முடைய ப்ரதம சிஷ்யரான கூரநாதர் இயற்றிய துதியாகிற சுந்தரபாகு ஸ்தவத்தையும் ஆண்டாள் அருளிய 'நாறுநறும் பொழில்மாலிருஞ்சோலை" என்ற பாசுரத்தின் பொருளால் சோலைமலைக்கரசிற்கு நூறுதடா அக்காரவடிசிலும் நூறுதடா வெண்ணெய்யும் அமுது செய்வித்து, அத்தால் கோதையின் முன்னர் தோன்றிய "அண்ணனே" என்ற பிருதும் பெற்றார். இவருக்கு "கோயிலண்ணன்" என்ற திருநாமம் ப்ரசித்தம், சொல்லாலும் செய்கையினாலும் செய்த தொண்டாகும்.

நற்றவர்கள் போற்றும் இராமாநுஜன் உயிர்கள் மெய்விட்டு ஆதிப்பரனோடு ஒன்றாம் என்று கூறும் பேதையர்களது வேதப் பொருள்களை வாதில் வென்று அல்லல்களைந்த அற்புதன், இவரால் தோற்றிய ஸ்ரீ வைஷ்ணவ பகவத் ராமாநுஜ சித்தாந்தமாகிற பெரிய வெள்ளம், ஆறுசமயங்களாகிற நீச சமணர்களையும், சூனியவாதர்களையும், சாக்கியப் பேய்களையும், ஏனைய அகச்சமயத்தவர்களையும்

அனைவரையும் காலமாகிற பெருகடல் கொள்ளச்செய்து எல்லா உயிர்க்கும் நாதன் அரங்கன் என்னும் வேதப் பொருளை சுரக்கச் செய்த பெருந்தகையோராவர்.

இவர் காலத்தின் பின்னர் தோன்றிய ஆசார்யர்களில் தலைசிறந்தோரான பிள்ளை லோகாசார்யரும் மணவாளமாமுனிகளும் வைணவ தரிசனத்திற்கு வேலியிட்டு பலவிடங்களிலும் திவ்ய தேசங்களிலும் ஜீயர்களை பாதுகாவலாகவும், கைங்கர்யபரர்களாலும் நியமித்து இன்றளவும் நடைபெற்று வருவது கண்கூடாகும். இவ்விதமே அழகர்மலைக்கும் ஓர் ஜீயர்ஸ்வாமிகள் நியமிக்கப்பட்டுள்ளார். சோலைமலையில் நிறுவப்பட்ட செண்டலங்கார ஜீயர் மடத்தில் ஸ்வாமி ராமாநுஜர் காலம் முதல் பல பெரியார்கள் 1940 வருடம் வரையில் மேற்படி ஸ்தானத்தை அலங்கரித்து தெய்வசிகாமணி கைங்கர்ய பேறுபெற்றவர்கள். எக்காரணத்தினாலோ சென்ற இருபது ஆண்டுகளாக யாரையும் நியமிக்காமல் காலம் கடந்து வருகிறது.

சங்க இலக்கியங்களாலும், ஆழ்வார்களாலும், ஆசார்யர்களாலும், புராண இதிகாசங்களாலும் மிக்வும் பெருமை பெற்ற திருமாலிருங்குன்றம் சிலம்பாறு என்றும் பெயர் பெற்ற நதியுடையது. மலையும், சுனைகளும், பொழில்களும், பாடல்களில் சிறப்புடன் கொண்டாடப்படுவதுடன், சோலைமலையே, எம்பெருமான் திருவுடம்பு என்று ஆழ்வார்கள் அநுபவிக்கிறார்கள். இது சென்ற ஆண்டளவும், ஆண்டாள் பாசுரத்துக்கு "கோங்கலரும் பொழில்" பொருளாகியே நின்றது. மதுரையில் உள்ள சில சைவர்கள் சமீபகாலத்தில் 1959-ல் மலைமேலுள்ள ஜம்பலபுத்தூர் மண்டபத்தின் அருகாமையில் வேல் ஒன்று கண்டதாகவும், அதை மேற்படி மண்டபத்தில் வைத்து பூஜிக்கவும், முருகன் சிலை ஒன்று அமைக்கவும், தேவஸ்தான அதிகாரிகள் மூலம் துணை பெற்று செயலாற்றுகிறார்கள். சென்ற 24—8—60ல் முருகன் சிலை பொறித்ததாக கூறுகிறார்கள்.

பத்திரிகைகள் துணையினாலும், செல்வாக்கினாலும், அரசாங்க அதிகாரிகள் ஆதரவினாலும் இச் செயல் புரிவது இவர்களுக்கே இழுக்காகுமன்றி நல்லறிவும், தூய சைவசமய ஞானம், நடுநிலை நெஞ்சம் படைத்த தமிழ் மக்கள் செயலாகாது. என்னை எனில் குறள் கற்ற தமிழர்கள் இச் செயல் புரிய துணியார்கள்:—

**"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளை**
**கள்ளத்தாற் கள்வேமெனல்"**

சைவர்களோவெனில் திருப்புகழ் பாடிய அருணகிரியார், முருகனை கூறுமிடத்து "உங்கள் சங்கரர் தாமாய், நீயாய், நானாய், மலரோனாய் எங்கும் நிறைந்த மாயோன்" என்றே பேசுதலாலும் திருமால் குன்றில் தகாத முறையில் நூதன தெய்வங்கள் புகுத்த முயலார்கள். இச் செயலை வைணவர்கள் ஓர் சைவத்திருப்பதியில் செய்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும் என்பதை பொதுமக்கள் சிந்திக்கவேண்டும். முதலாவதாக அதிகாரிகள் தடுப்பார்கள், பின்னர் பத்திரிகைகள் தூற்றும், சைவமக்களை தூண்டி பழிகொள்வார்கள். வைணவர்களோ எனின் தாங்கள் மிகவும் குறைந்த தொகையுடையவர்க

ளானதினுலும், இப்பொழுது நடத்தப்படும் அரசாங்கத்தாரால், ஆதரிக்கப்படார்கள் என்பதினுலும், பல துன்பங்களுக்குள்ளாகியும் இருக்கும் நிலையில்

**" அகழ்வாரை தாங்கும் நிலம்போல் தம்மை**
**இகழ்வாரை பொறுத்தல்தலை "**

என்ற குறள் உண்மையை கைக்கொண்டார்கள். இதன் விளைவு தான் இப்பொழுது மேலூர் நியாய மன்றத்தில் நடக்கும் 219 of 60 வழக்காகும். ஆதரவுமன்றி, மக்கள் துணையுமின்றி அரசாங்க அதிகாரிகளின் வெறுப்புக்குள்ளாகியும் நிற்கும் நிலையில், நீதிமன்றம் தவிர புகல் எமக்கு இல்லை. கலியுகம் தோன்றி ஐயாயாயிரமாண்டு கள் கழிந்தும், உயர்ந்த சைவ அரசர்கள் மதுரையில் ஆட்சிபுரிந்தும், ஞானத்தின் திருவுருவாகிய சம்பந்தரும் நான்மறையின் துணையா கிய மாணிக்கவாசகரும், தொண்டர்நாதராகிய அப்பரடிகளும், ஏனைய சங்கநூல் புலவர்களும், ஞானிகளும், மடாதிபதிகள் காலத்தும் அழகர்மலையில் தோன்ருத, தோற்றுவிக்காத, **பழமுதிர்சோலையை** (இன்று 1960ல்) பிறர றியாவண்ணம் இரவினில் புகுத்துவது, யாவர் செயலாகும் என்பதை உயர்ந்தோர்கள் கருதவேண்டும். மதுரை யிலோ, பிறவிடங்களிலோ உள்ள வைணவர்கள் என்ருவது இத்தகைய செயல் புரிவார்களோ அல்லது நெஞ்சால்தான் நிணைப்பார் களோ என்பதும் நினைவில் கொள்க. மீனுக்ஷிசுந்தரேசுவரர் ஆலயத் தில், கரியமாணிக்கப்பெருமாள் சன்னதி உண்டென்பது கல்வெட்டு களும் சாசனமும் கூறுகின்றன. இதை கேட்க யாம் துணியவில்லை. இப்பொழுதுள்ள வைணவ தலங்களையே பாதுகாப்பது பெரும் பாடாகிவிட்டது எமக்கு, மேலூர் கோர்ட்டில் நடைபெறும் வழக்கில் இரண்டே அம்சங்கள் முக்கியமானவை:—

(1) **அழகர் மலைமேலுள்ள " ஜம்பலபுத்தூர் மண்டபம் " அழகர் தேவஸ்தான சொத்தா ?**

(2) **அழகர் மண்டபமாகில், கோயிலின் ஆசார அனுட்டானங் களுக்கு மாருக பிற தெய்வங்களை அதில் வைத்து வழிபட ஆணையாளருக்கும், டிரஸ்டிகளுக்கும் அதிகாரமுண்டா ? என்பதே.**

இதில் சைவ வைஷ்ணவ தகராறு இல்லை. மண்டபம், ஆண்டி பட்டிக்கடுத்த ஜம்பலபுத்தூர் கிராமத்தாரால் சில நூற்ருண்டு களுக்கு முன் அழகர் தொட்டிக்கு எழுந்தருளும்பொழுது விடாயத்தி மண்டபமாக கைங்கர்யம் செய்ததாகும். சென்ற நூற்ருண்டுவரையில் (1900—10) வரையில் மண்டபப்படிகள் நடைபெற்று வந்தன. இது தேவஸ்தான ரிக்கார்டுகளில் கிடைக்கும் ஆதாரங்கள்.

இவ் வழக்கில் முருகன் சிலை அமைக்கப்பட்டதினுல்தான் வைணவர்கள் வழக்குத்தொடர்ந்தார்கள் என்று கருதவேண்டாம். பழைய திவ்ய தலங்களில் நூதனமாக எவரேனும் யாதொரு சிலையோ, விக்ரகங்களோ புகுத்தினுலும், அதை எதிர்த்து நிவர்த்திப் பதே எமது கடமையாகும். முக்யமாக காஞ்சீபுரம், திருபுட்குழி,

பாம்பே, மதுரை அழகர் கோயில் முதலிய இடங்களில், **வைணவ ஆசார்யர்கள்** சிலைகளையே புகுத்தியபோது அம் முயற்சிகளை எதிர்த்து, மூன்று கோர்ட்டுகளிலும் வழக்கு செய்து, அச் சிலைகளை அகற்றிவிட்டதே சரித்திரமாகிவிட்டது. நம் நாட்டில் ஒரு கோயிலை பிறிதொரு கோயிலாகவோ, சிலைகளை புகுத்தவேண்டிய நிலைமையில்லை. கோயில்களுக்கும் குளங்களுக்கும் குறைவில்லாமல் தனித் தனியாக நம் முன்னோர்கள் கட்டிவைத்துள்ளார்கள். வைணவர்கள் பிறகோயிலில் புகுந்து மாற்றினார்கள் என்பது கேட்டறியோம். வைணவக் கோயிலான திருக்குற்றாலம், சைவமாக்கப்பெற்றது என்பது கந்தபுராணப்படலம் கூறுகிறது. யாம் அதை மறுபடியும் வைஷ்ணவ ஸ்தலமாக்க முயற்சி செய்யவில்லை.

பொதுமக்கள் உண்மை உணரவும், வீணாக காரியம் காரணமும் வெவ்வேறாக உள்ளபோது திரித்துக்கூறுவதைத் தவிர்க்கவே யாம் இத்துணை எழுத நேர்ந்தது. எங்கள் சம்பிரதாயம் யாருக்கும் இடைஞ்சல் இல்லாமலும், எவரையும் நிந்திக்காமலும், ஏதோ எங்கள் முன்னோர் இட்ட வழிகளில் செல்லுவதே தவிர பிறருடைய மதங்களிலோ, கோட்பாடுகளிலோ, பாத்யதைகளிலோ தலையிடுவதன்று. ராமாநுஜ தரிசனத்தின்கண் உள்ள கோயில்களை பராமரித்து செப்பம் செய்து திறம்பட செய்வதுதான் எம்மனோர் கொண்ட முடிந்த பொருள்.

அவரவர் அறிவுற்கேற்ப தெய்வ வழிபாடு செய்தல் உலகியற்கை. இன்றளவும் இராமாநுஜ தர்சனத்தை சேர்ந்த வைணவர்கள் மறந்தும் புறந்தொழா மாந்தர் என்ற பிருது பெற்றவர்கள். சமீபகாலமாக சிலர் எக்காரணங்களைக்கொண்டோ புதுத் தெய்வம் கொண்டாடும் புதுமையும், பெற்றதாயிருக்க மணை வெந்நீர் ஆட்டுதிரோ என்ற கலியன் வாக்கையும் புறக்கணித்து, தமது புல்லறிவாண்மையை காட்டுவான் வேண்டி புடை பல தெய்வம் பேணிவருதல் யாமறியாததன்று. இது நாகரீகத்தின் கோலமேயாகும். நாம் பெரியோமல்லோம். நன்றும் தீதும் உரைப்பாரை நாளும் நாடுவோம்.

ஆயினும் "தன்குலம் தன்னதாக்கி" என்ற கம்பர் வாக்கை நினைத்து முன்னம் நிலைபெய்த வாக்கைக்கு நோற்று குணங்கொண்டு மற்றோர் தெய்வம் தொழாத நல்நெஞ்சம் பெற்ற பொய்யா நாவின் வைணவர்கள் இன்றும் உளரென்றே கருதி அவர்களை தங்கள் சொல்லாலும் செய்கையினாலும் துணைபுரிய வேண்டுமென்றே இறைஞ்சுகின்றோம். இவ்விரண்டும் அற்றவர்கள் சிந்தையாலாவது வாழ்த்துமின். அதுவுமில்லையேல், இதை எண்ணாத மானிடத்தை எண்ணாதபோதெல்லாம் எமக்கு இனியவாறே என்றே நிற்போம்.

"**வணங்கேன் பிறதெய்வம் மாலடியாரை அல்லால்**" என்பர்,

— பி. பெ. அய்யங்கார்

பம்பாய்,
20—3—61.

ஸ்ரீநிவாஸ ராமாநுஜாசாரியார்,
பராங்குசதாசர், ஸ்ரீரங்கம்.

THE H. S. D.